**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப் பகுதி - 02 - 2021**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப்பகுதி – 02 இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு கொழும்பு மாநாகரசபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூன் 03 ஆம் திகதிய 3030 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் உறுப்புரிமை II இன் 2.10 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சாவகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன அமுலாக்கல் முகவராக உள்ளன. கொழும்பு பெரும்பாக பகுதியிலுள்ள நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதிசார் நிலைத்திருக்கும் தன்மையை முன்னேற்றுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 1230.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9.44 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 1042.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8.00 மில்லியனை நிதியளிப்புச்செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதித்தொகையான ரூபா 187.72 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 1.44 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 செப்தெம்பர 23 ஆந் திகதியில் ஆரம்பித்ததுடன் 2019 யூன் 30 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதியானது 2022 ஒக்தோபர் 24 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

நிகழ்ச்சித்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி-யொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|
| 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு. | வழிகாட்டல் குழு குறைந்தது 2 மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட்டப்பட வேண்டும். இருப்பினும் 2021 ஆம் ஆண்டிற்குள் இரண்டு வழிகாட்டல் குழு கூட்டங்கள் மாத்திரம் இடம்பெற்றுள்ளது. | கொவிட்-19 காரணமாக சுகாதார அதிகாரசபையால் அமுல்படுத்தப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்கி கூட்டமொன்றை நடாத்துவது கடினமாகவிருந்தது. | மாற்றுவழியாக நிகழ்நிலை கூட்டங்கள் ஒழுங்குப்படுத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக முன்னெற்றம்

| கூறு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| ------ | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றம் | அடையப்பட்ட செயன்முன்னேற்றம். | | |
| | சதவீதம் | சதவீதம் | | |
| வடிவமைப்பு மேற்பார்வை நிறுவனரீதியான ஆலோசனையாளர்களின் அபிவிருத்தி | 100 | 58 | நிகழ்ச்சித்திட்டம் 2014 யூன் 3 இல் ஆரம்பிப்பதற்கும் 2019 யூன் 30 இல் பூர்த்தியடைவதற்கும் பட்டியலிடப்பட்ட போதும் இறுதித்திகதி 2022 ஒக்தோபர் 24 வரையிலும் 2 தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது. | ஓப்பந்த முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகளால் செயற்திட்ட ஒதுக்கீடு , சாத்தியவளக் கற்றை, சூழல் மதிப்பீடு, காணி சுவீகரிப்பு, மீன்குடியேற்றல் செய்முறையால் இந்த நிகழ்ச்சித்திட்டம் மெதுவான நகரும் நிகழ்ச்சித்திட்டமாக பதிவு செய்யப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) மடம்பிற்றியவிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி | 100 | இல்லை | கழிவுநீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்திற்கான காணி 2021 திசெம்பர் 31 அளவில் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் சுவீகரிக்கப்பட்டிருக்காததுடன் சூழல் விளைவு மதிப்பீட்டு அறிக்கை தயார்படுத்தல் தற்காலிகமாக பிற்போடப்பட்டது | 2019 செப்தெம்பர் 28 இல் ஆலோசனை நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட விலைமனு ஆவணங்கள் மீளாய்வாண்டிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால், மனுவிடல் செய்முறை 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியடையப்பட்டிருக்காததுடன் கூறினை நீடிப்பதற்கு நிதிபோதாதிருந்தது. |
| (ஆ) வடக்கு நீர்பிடிப்புப் பகுதியிலுள்ள 7 பாதுகாப்பற்ற பிரதேசங்களிற்காக கழிவகற்றல் வசதிகளை வழங்கல். | 100 | இல்லை | புவிசார் தொழில்நுட்ப விசாரணை ஒப்பந்தத்திற்கான விலைமனுச் செயன்முறை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | மேலதிக கடன் நிதியம் இல்லாதிருத்தல். |
| (இ) வடக்கு நீர்பிடிப்புப் பகுதியிலிலுள்ள 5 சிறிய பம்பிங் வீடுகளை மீளமைத்தல் மற்றும் புனரமைத்தல். | 100 | இல்லை | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிபந்தனை மதிப்பீடு தொடங்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதியம் போதாதிருந்தது. |
| (ஈ)மல்லிகாவற்றவிலிருந்து மடம்பிற்றியாவரைக்குமான அடிமட்ட தண்டு சாக்கடை | 100 | இல்லை | வரைபு விலை மனு ஆவணம் பூர்த்தியாக்கப்பட்டதுடன் வேலை வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதி வரையறை காரணமாகவிருந்தது. |
| (உ) வடக்கு நீர்பிடிப்புப் பகுதியிலிலுள்ள சாக்கடைகளை தரமுயர்த்தல் மற்றும் மீளமைத்தல். | 100 | இல்லை | 2019 செப்தெம்பர் 28 இல் வரைபு விலைமனு மீளாய்விற்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அவை அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி வரையறை காரணமாகவிருந்தது. |
| (எ) தற்போதுள்ள சாக்கடைகளின் 97.2 கிலோமீற்றரினை சீசீரீபி மற்றும் விசேட கருவிகளை கொண்டு விசேட மதிப்பீடு செய்தல். | 100 | 1 | விலைமனுச் செய்முறை 2016 ஆரம்பிக்கப்பட்ட போதும் ஒப்பந்தம் 2021 ஒக்தோபர் 12 இல் வழங்கப்பட்டது. | குறிப்பிடப்பட்ட நேரத்தினுள் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நடவடிக்கையை நிறைவேற்றாமையால் நிகழ்ச்சித்திட்டத்தின் |

| | |
|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடையமுடியாதிருந்தது. |
| முகாமைத்துவத்தின் பதில் | தகுதியான விலைமனுதாரரில்லாமை, தற்போது நடைபெறுகின்ற ஒப்பந்தத்தின மந்தமான செயன்முறை, விலை மனு ஆவணங்களை தயாரிப்பதிலிலுள்ள காலதாமதங்கள் மற்றும் ஒப்பந்தகாரரரிற்கு முன்னுரிமை அளித்தல் போன்றன தாமதத்திற்கு காரணமாகவிருந்தது. |
| கணக்காய்வாளரின் பரிந்துரை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலம் காலாவதியாகுவதற்கு முன்னர் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|
| சீசீரிவீ தொழில்நுட்பத்தை உபயோகப்படுத்தி கழிவு நீர் சுத்திகரிப்பு ஆய்வுகளை மேற்கொள்ளும் பெறுகைச்செயன்முறை மற்றும் 108 கி.மீற்றருக்கு கழிவு நீர் குழாய்கள் தொடர்பான சொத்துத் தரவுத்தளமொன்றை ஒழுங்குபடுத்தும் பெறுகை நடைமுறையை 2016 யூலை 01 இல் ஆரம்பிப்பதற்கு நிரற்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தம் 2021 ஒக்தோபர் 12 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு நிதியிடல் செயற்திட்டத்திலும் பார்க்க நன்கொடை நிதியளித்தல் செயற்திட்டத்தின் பெறுகைச்செய்முறைக்காக பெறுகை நிறுவனமானது பல செய்முறைகளை பின்பற்ற வேண்டியிருந்தமையால் ஒப்பந்தத்தினை தெரிவுசெய்தல் வழங்குவதற்காக மேலதிக நேரம் தேவைப்படுகின்றது. | நேரத்தை குறைந்தளவில் வீணாக்குவதற்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் காலம் காலாவதியாகுவதற்கு முன்னர் நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். |